இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 24.10.2026

விஜய் சர்க்கார், போலீஸ் சர்க்கார்!

தராபுரத்தில் நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் கார்த்திகாவை அராஜகமாகக் கைது செய்துள்ளது விஜய் அரசாங்கம். "நான் எந்தத் தவறும் செய்யவில்லை. பிரச்சாரத்தின் கடைசி தினத்தன்று முதலமைச்சர் விஜய்க்கு மட்டும்தான் வாக்குச் சேகரிக்க உரிமை உள்ளதா? இரவு உடையில், நைட்டியுடன் என்னை கைது செய்துள்ளனர். நாங்கள் என்ன போதைப்பொருள் கடத்தினோமா?" என்று ஊடகங்களின் முன்னால் கார்த்திகா கேள்வி எழுப்பி இருக்கிறார்.

இது தனிப்பட்ட கார்த்திகாவுக்கு மட்டும் நடக்கும் கொடூரம் அல்ல. விஜய் ஆட்சி அமைத்தது முதல் அவரது ஆட்சிக்கு, கட்சிக்கு எதிராகச் செயல்படும் அனைவரும் எதிர்கொள்ளும் நெருக்கடி ஆகும். ஜனநாயக வழியில் போராடும் அனைவரும் எதிர்கொள்ளும் நெருக்கடி ஆகும்.

வாக்குத் திருட்டுக்கு எதிராக சென்னையில் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர், இளைஞர் அமைப்பினரைக் கூட விஜய் அரசு விட்டு வைக்கவில்லை. அராஜகமாகக் கைது செய்துள்ளது.

வாக்குத்திருட்டுக்கு எதிராகவும், டெல்லியில் இது தொடர்பாக போராடி வருவோருக்கு ஆதரவாகவும், சென்னை எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் மைதானம் அருகே போராட்டம் நடைபெற்றது. எஸ்.எஃப்.ஐ., ஏ.ஐ.எஸ்.எஃப்., ஏ.ஐ.ஒய்.எஃப். உள்ளிட்ட 9 மாணவர் மற்றும் இளைஞர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்று, 24 மணி நேரப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர். வாக்குரிமை பறிக்கப்படுவதாகக் குற்றம்சாட்டியும், ஜனநாயகத்தைக் காக்க வேண்டும் என வலியுறுத்தியும் பல்வேறு பதாகைகளை ஏந்தி, ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். இந்நிலையில், அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர் மற்றும் இளைஞர் அமைப்பினரை விஜய் அரசு அராஜகமாகக் கைது செய்துள்ளது. சாதாரணமாகப் போராடும் உரிமைகூட தடுக்கப்படுகிறது.

சென்னை எழும்பூரில் 20 முக்கியமான கோரிக்கைகளை வைத்துப் போராட்டம் நடத்திய செவிலியர்களை பெண்கள் என்றும் பாராமல் அராஜகம் செய்தது விஜய் போலீஸ்.

ஆயிரக்கணக்கான செவிலியர்கள் காலை முதலே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் நடத்துவதற்காக முறையான அனுமதி பெற்றும் அடிப்படை வசதிகளான குடிநீர், கழிவறை போன்ற வசதிகளைக் கூட தங்களுக்குச் செய்து தரவில்லை எனக் குற்றம்சாட்டிய செவிலியர்கள், தங்களின் நியாயமான கோரிக்கைகளைக் கேட்க, அழைத்துப் பேசக் கூட மனமில்லாமல் த.வெ.க. அரசு வேடிக்கை பார்ப்பதாகக் குற்றம்சாட்டினர். இந்நிலையில், செவிலியர்களின் போராட்டம் மாலை நேரத்திலும் தொடர்ந்ததால் ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டு இரவோடு இரவாக செவிலியர் சங்க நிர்வாகிகள் குண்டுக்கட்டாகக் கைது செய்யப்பட்டனர்.

போராட்டக் களத்தில் இருந்த பந்தல்களை அகற்றி, மின் இணைப்புகளையும் துண்டித்து போலீசார் அராஜகத்தில் ஈடுபட்டனர். அதன்பிறகும் செல்போன் வெளிச்சத்தில் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றதால் செவிலியர்களைக் காவல்துறையினர் குண்டுக்கட்டாக கைது செய்தனர் இதனால் தள்ளுமுள்ளு ஏற்பட்டு போராட்டக்களம் போர்க்களமாக மாறியது. இதில் செவிலியர்கள் பலர் மயக்கமடைந்தனர். அவர்களுக்கு முதலுதவி சிகிச்சைகூட தராமல் கைது செய்யும் நடவடிக்கையில் காவல்துறையினர் ஈடுபட்டனர். சாலை மறியலில் போய் முடிந்தது இந்தப் போராட்டம்.

இதே போல்தான் தூய்மைப் பணியாளர் போராட்டத்தையும் போலீஸை வைத்து ஒடுக்கியது விஜய் அரசு. போராடியவர்களை வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தினார்கள். பேருந்துகளில் ஏற்றி வேறு இடங்களில் கொண்டு போய் விட்டார்கள். போலீஸாருடன் வர மறுத்தவர்களை குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்று கைது செய்தார்கள். போலீஸை அளவுக்கு அதிகமாகக் குவித்து மிரட்டினார்கள்.

விஜய் பெரம்பூரில் போட்டியிட்டவர் என்பதால் அவரது அலுவலகத்தையே முற்றுகையிட்டார்கள் தூய்மைப் பணியாளர்கள். அவர்களை தரதரவென இழுத்துச் சென்று கைது செய்தது காவல் துறை.

பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர் மேம்பாட்டுச் சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அக்டோபர் 12ஆம் தேதி சென்னையில் அமைதி வழி உண்ணாவிரதம் இருக்கத் திட்டமிட்டனர். தமிழ்நாடு முழுவதும் இருந்து சென்னை வந்தனர். சென்னைக்குக் கிளம்பியவர்களை உள்ளூரில் கைது செய்தது காவல் துறை. சென்னைக்கு வந்து இறங்கியவர்கள் கைது செய்யப்பட்டார்கள். உண்ணாவிரதம் இருக்கும் இடத்துக்கு வந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

காவல் துறையைப் பார்த்து கலைந்தவர்களையும் விரட்டிச் சென்று கைது செய்தார்கள். அருகில் இருந்த கழிவறைக்குச் சென்ற பணியாளர்களையும் கழிவறைக்குள் சென்று போலீஸ் கைது செய்தது. இவை அனைத்தும் கடந்த ஒரு மாதத்தில் நடந்தவை ஆகும்.

தூய்மைப்பணியாளர் போராட்டம், செவிலியர் போராட்டம், மருத்துவப்பணியாளர் போராட்டம், மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் ஆகிய அனைத்தையும் போலீஸ் வைத்து ஒடுக்கி இருக்கிறது விஜய் அரசு. காவல் துறையையே அவர்தானே வைத்துள்ளார். மக்களை ஒடுக்கவே போலீஸைப் பயன்படுத்துகிறார் விஜய்.

'விஜய்யை நம்பி வோட்டுப் போட்ட எங்களுக்கு இந்த தண்டனையா?' என்று இப்போராட்டங்களில் பங்கெடுத்த மக்கள் பேட்டி அளிப்பதைப் பார்க்கும் போது வருத்தமாகத் தான் இருக்கிறது. தன்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு தண்டனையை மட்டுமே தந்து கொண்டுள்ளார் விஜய்.

விஜய் சர்க்கார், ஒட்டுமொத்தமாக போலீஸ் சர்க்காராகவே இருக்கிறது.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – முன்னாள் அமைச்சர்

கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் இல்லத் திருமண விழா!

உதயநிதி ஸ்டாலின் முன்னிலை! இன்று மணவிழா வரவேற்பு!

சென்னை. அக்.24 -

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - முன்னாள் அமைச்சரும் விருதுநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் கழக மூத்த முன்னோடியுமான கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள் இல்ல மணவிழாவை நாளை (25 ஆம் தேதி - ஞாயிற்றுக்கிழமை) காலை, சென்னை - திருவான்மியூரில் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மண விழாவிற்கு கழக இளைஞரணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

மணவிழாவிலும் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சியிலும் முன்னாள் அமைச்சர்கள் - மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்ற - நாடாளுமன்ற முன்னாள் - இந்நாள் உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் எனப் பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

இம்மணவிழா பற்றிய விவரம் வருமாறு :-

முன்னாள் அமைச்சரும், விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் – திருமதி ஆர்.ஆதிலட்சுமி ஆகியோரின் மகள் வழிப் பேரனும் – டாக்டர் பா.அருண்குமார் – உமாமகேஸ்வரி ஆகியோரின் புதல்வருமான ஏ.வைஷ்ணவிற்கும் – திரு நெல்வேலி சரவணன் – திருமதி விஜய சங்கரி ஆகியோரின் புதல்வியான எஸ். விகாஷ்னிக்கும் திருமண விழா நாளை (25.10.2026 – ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் சென்னை – திருவான்மியூரில் அமைந்துள்ள இராமச் சந்திரா கன்வென்ஷன் ஹாலில் நடை பெறுகிறது.

மணவிழாவில் முன்னாள் அமைச்சரும் விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளருமான தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றுகிறார்.

இத்திருமண விழாவினை கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து – மண மக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மணவிழாவிற்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

மணவிழாவில் – கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., கழகத் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., மு.க. தமிழரசு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி எம்.எல்.ஏ., க. பொன்முடி, ஆ.ராசா எம்.பி., அந்தியூர் செல்வராஜ், திருச்சி என்.சிவா எம்.பி., மு.பெ.சாமிநாதன், திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளர் எ.வ.வேலு எம்.எல்.ஏ., கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி, கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, தேசிய முற்போக்கு திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ., மக்கள் நீதி மையம் கட்சித் தலைவர் கலைஞானி கமல்ஹாசன் எம்.பி., கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லாஎம்.எல்.ஏ., மனிதநேய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேலும் இம்மண விழாவில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சு.முத்துசாமி, கே.ஆர். பெரியகருப்பன், கோவி.செழியன், அர.சக்கரபாணி, வி.செந்தில்பாலாஜி, அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன், எஸ்.எஸ். சிவசங்கர், ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, பி.மூர்த்தி, சிவ.வீ.மெய்யநாதன், பி. கீதாஜீவன், டி.ஆர்.பி.ராஜா, சி.வெ. கணேசன், த.மனோ தங்கராஜ், பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், க.ராமச்சந்திரன், சேலம் இரா.இராஜேந்திரன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மா.சுப்பிரமணியன், கே.எஸ்.மஸ்தான், சா.மு.நாசர், கயல்விழி செல்வராஜ், ம.மதிவேந்தன், ஆர்.காந்தி ஆகியோரும்,

பொன்.முத்து ராமலிங்கம், சுப.தங்கவேலன், மு.கண்ணப்பன், பொங்கலூர் ந.பழனிசாமி, எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ஏ.கே.எஸ்.விஜயன், கே.சி.பழனிசாமி, எல்.மூக்கையா, தி.அ.முகமது சகி, எம்.கந்தசாமி, வாகை சந்திரசேகர், உ.மதிவாணன், திண்டுக்கல் ஐ.லியோனி,

கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ்.ஆஸ்டின், ப.தாயகம் கவி, தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், அண்ணா அறிவாலயம் பொது மேலாளர் ஆர்.பத்மநாபன், பொன் தனபால், மற்றும் மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற – நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், பல்வேறு கழக அணிகளின் செயலாளர்கள் – என கழக முன்னோடிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. நன்றி கூறுகிறார்.

முன்னதாக இன்று (24.10.2026 – சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடை பெறுகிறது.

கோவையில் மாணவர் உயிரிழந்த விவகாரம்:

சாதியப் பாகுபாட்டைத் தூண்டிய ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, அக். 24 –

மனித நேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. விடுத் துள்ள அறிக்கை வருமாறு :-

கோவையில் பிளஸ் 1 மாண வர் உயிரிழந்த சம்பவம் மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையை யும் அளிக்கிறது. இந்தத் துயர மான சம்பவத்தில், சாதிய வன் முறையைத் தூண்டும் வகையில் பேசியதாகக் குற்றச்சாட்டுக்கு உள் ளாகியுள்ள அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர் அருண் குமார் மற்றும் ஆசிரியர் விஜய குமார் ஆகியோர் மீது காவல்



துறை வழக்குப் பதிவு செய்துள்ள தாக தெரிய வருகிறது.

கல்வி நிறுவனங்கள் சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து சமத்து வத்தையும் சகோதரத்துவத்தை யும் மனிதநேயத்தையும் வளர்க்க வேண்டிய இடங்களாகும். குறிப் பாக, ஆசிரியர்கள் மாணவர்களி டையே சமத்துவ உணர்வையும் சமூகநீதிக் கொள்கைகளையும் விதைக்க வேண்டியவர்கள். அத்த கைய பொறுப்பில் இருப்பவர்கள் மீது சாதியப் பாகுபாட்டைத் தூண் டும் வகையில் செயல்பட்ட குற்றச் சாட்டு எழுந்திருப்பது கல்வித்து றைக்கே தலைகுனிவை ஏற்படுத்துகிறது.

சாதியின் பெயரால் ஒரு மாண வர்கூட அவமானப்படுத்தப்படு வதோ, அச்சுறுத்தப்படுவதோ, ஒதுக்கப்படுவதோ அனுமதிக்க முடியாது. மாணவர்களின் பாது காப்பையும் மனநலத்தையும் உறு திப்படுத்த வேண்டிய பள்ளிகளில் சாதியப் பாகுபாட்டுக்கு இடமளிப் பது அரசியலமைப்புச் சட்டம் வலி யுறுத்தும் சமத்துவக் கோட்பாட்டுக் கும் சமூகநீதிக்கும் எதிரானதாகும்.

அதேவேளையில், மாணவ ரின் உயிரிழப்புக்கான உண்மை யான காரணங்களையும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதா கக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை யும் காவல்துறையினர் எவ்வித அரசியல் அல்லது நிர்வாக அழுத் தங்களுக்கும் இடமளிக்காமல் நேர் மையாகவும் முழுமையாகவும் விசாரிக்க வேண்டும். வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் கள் மீதான குற்றச்சாட்டுகள் உரிய ஆதாரங்களின் அடிப்படையில் விசாரிக்கப்பட்டு, சட்டப்படி நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு அரசு, பள்ளிகளில் சாதியப் பாகுபாட்டைத் தடுப்பதற் கான நடவடிக்கைகளைத் தீவிரப்ப டுத்த வேண்டும். மாணவர்களிடம் சமத்துவம், மனிதநேயம், சகோத ரத்துவம் ஆகிய விழுமியங்களை வளர்ப்பதற்கான விழிப்புணர்வை யும் ஆசிரியர்களுக்கான பயிற்சி களையும் வலுப்படுத்த வேண்டும்.

ஒரு மாணவரின் உயிரிழப்பும், ஒரு மாணவரின் கண்ணியமும் அலட்சியப்படுத்தப்படக் கூடாது. சாதியப் பாகுபாடற்ற கல்விச் சூழலை உருவாக்குவது அரசின் கடமை மட்டுமல்ல; அது நமது சமூகத்தின் எதிர்காலம் குறித்த பொறுப்புமாகும்.

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

வன்னி அரசு வார்த்தைகளை அளந்து பேச வேண்டும்!

பார்ப்பனிய அடிமைத்தனத்தைப் பற்றி பனையூர் அடிமைகள் பேசலாமா?

தி.மு.க. இளைஞர் அணி சமூக வலைதளப் பதிவு!

சென்னை. அக்.24-

தி.மு.க. இளைஞர் அணி யின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

கழகத்துக்கும் நாம் தமிழர் கட்சிக்கும் இடையே எந்தக் கூட்டணியும் இல்லை. நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கைதுக்குக் கழகம் கண்டனம் தெரிவித்தது முழுக்க முழுக்க மனிதாபிமான அடிப்படையில் மட்டும்தான்.

திராவிட முன்னேற்றக் கழ கம் மட்டுமா இந்த ஜனநாயக விரோதச் செயலுக்குக் கண்ட னம் தெரிவித்தது? தமிழ்நாட் டில் உள்ள பெரும்பாலான கட் சிகள் இதனைக் கண்டித்தனர். த.வெ.க. அரசில் அங்கம் வகிக் கும் காங்கிரஸ் கட்சி நாடாளு மன்ற உறுப்பினரே கண்டித் தார். அவர்களெல்லாம் நா.த.க.வோடு கூட்டணியில் இருப்பவர்களா, கொள்கையை மறந்தவர்களா, அல்லது வி லை போ ன வ ர் க ள ா ? **வன்னி அரசு அவர்களின் சொற்களில் சொன்னால், வெட் கம் இல்லாதவர்களா?**

உண்மையில் வெட்கம் கெட்ட செயல் எது? 'RSS பெற் றெடுத்த பிள்ளைகள்' என்றும், 'விசிலடிக்கும் கூட்டம் தியேட்ட ருக்குச் செல்லலாமே தவிர, சட்டமன்றத்துக்குச் செல்லக் கூடாது' எனவும் கொக்கரித்து விட்டு, இன்று அதே த.வெ.க கூட்டணியில் சேர்ந்து தொடர் வதுதானே? **இதேவன்னியரசு அவர்களே 'கரூரில் 41 பேர் இறந்தபோது ஓடிப்போன கோழை' என்று எத்தனை முறை விமர்சித்திருப்பார்,** அந்த கோழையை இப்போது புகழ்வது வெட்கம் கெட்ட செயல்தானே? விஜய்யின் திரைப்பட பாடல்களை லயோலா மணி என்பவர் புரட் சிகரப்பாடல்களாக சிலாகித்த போது கடுமையாக விமர்சித்த வன்னி அரசு இப்போது லயோலா மணி 2.0 ஆக மாறியது வெட்கம் கெட்ட செயலில்தானே வரும்?

திருச்சியில் வி.சி.க. சார்பில் 2019-ஆம் ஆண்டு நடத்தப் பட்ட மாநாட்டில் எங்கள் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சனாதன ஆதிக்க சக்திகளுக்கு எதிராகப் பேசினார். எங்கள் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சனாதன ஒழிப்பு மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய பேச் சில் இருந்து பின்வாங்காமல், இன்று வரை துணிச்சலாக நின்று எத்தனை வழக்குகள் தொடரப்பட்டாலும் எதிர் கொண்டு வருகிறார்.

வன்னி அரசு அவர்களால், அவர்களது கூட்டணி அரசின் முதலமைச்சர் நடிகர் விஜய் - யை இதுபோலப் பேச வைக்க முடியுமா?

வி.சி.க. இப்படி ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்தால் அவர் முதலில் கலந்துகொள் வாரா? மதுராந்தகம் இடைத் தேர்தல் பரப்புரையில் அவர் கள் கட்சி பரப்புரை மேடையில் கூட, விஜய் அவர்களுடன் வி.சி.க. தலைவர் திருமாவள வன் உள்ளிட்ட எந்தக் கூட்ட ணிக் கட்சித் தலைவரும் ஏறக் கூடாது என்ற சாதியப் பார்வை யோடு செயல்பட்ட அரசுக்குச் சாமரம் வீசுவதுதான் வன்னி அரசு அவர்களின் சனாதன எதிர்ப்பா?

இதுதான் வி.சி.க.வின் முற்போக்கா?

ஆரிய திராவிடப் போர் குறித்து வாய் கிழியப் பேசும் வன்னி அரசு அவர்களால், முதலமைச்சர் விஜய் அவர் களை 'ஆரியத்தை வேரறுப் போம்' எனப் பேச வைக்க முடியுமா? வன்னி அரசு அவர் கள் சட்டமன்றத்தில் பா.ஜ.க. என்றோ, மோடி, அமித்ஷா என்றோ, RSS என்றோ சொன் னாலே, பேச விடாமல் தடுத்து, அவைக்குறிப்பில் இருந்து நீக் கும் பா.ஜ.க அடிமைக்கூட்டம் தானே த.வெ.க!

சாக்கடைக்குள் அமர்ந்து கொண்டு, சாலையில் செல் வோரைப் பார்த்து நாற்றம் அடிக்கிறது என்று சொல்வதற் கும், த.வெ.க. கூட்டணியில் இருந்துகொண்டு அறிக்கை என்ற பெயரில் வி.சி.க.வின் வன்னி அரசு அவர்கள் மேற் கொள்ளும் அவதூறுக்கும் பெரிய வேறுபாடு எதுவும் இல்லை.

பா.ஜ.க.வுக்கும் பார்ப்பனி யத்துக்கும் கட்டுப்பட்டு நடக் கும் த.வெ.க. அரசில் பனை யூர் பண்ணையாரை எதிர்த் துப் பேச முடியாமல் தி.மு.க. மீது சேற்றை வாரி வீசும் வன்னி அரசு, வார்த்தைகளை அளந்து பேச வேண்டும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; விரைவில் அரிசி விலை குறையும்ன்னு உணவு மந்திரி சொல்லி இருக்காரே, கேள்விப் பட்டியா?

போண்டி : **ஆமாய்யா; அவர்தான் கொஞ்ச நாளைக்கு முன் அரிசி உள்ளிட்ட பொருட்களின் விலை உயர வில்லைன்னு பேட்டியே கொடுத்தாரு இப்ப குறையும்ன்னு சொன்னதிலிருந்து விலை உயர்வை ஒத்துக்கிறார்ன்னு தானே அர்த்தம். நல்ல கவர்ன்மெண்ட்; நல்ல மந்திரி.**